இளந்தளிர்

5 தரம்

2ம் தவணைக்கான சஞ்சிகை

புதிய வெளியீடு 2020

ISSN 2719-2199

COLOMBO EXPRESS



பகுதி - I வினாத்தாள் பகுதி - II வினாத்தாள்கள்

மற்றும் பாடரீதியான பயிற்சி செயலட்டைகள்

பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது

அனுபவம் இல்லாத அறிவு பலன் தராது.

200/=

K.V.PRINTERS BOOKS DISTRIBUTING CENTRE

No. 58, Green Lane, Colombo - 13. Tel : 011 2330723 / 011 4330451 Fax : 011 2434723

zoom Online வகுப்புக்கள்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை



" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- கணிதம்
- சுற்றாடல்
- நுண்ணறிவு
- பேச்சு சிங்களம்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் I தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

76667-4945



தரம் – 05 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்காக
தயார்ப்படுத்தும் மாதிரி வினாத்தாள் – 1

பெயர் : ..... நேரம் : 1மணித்தியாலம்



வினாத்தாள் I

✻ முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்டுள்ள பாடலிற்குப் பொருத்தமான உருவை விடையிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.


01. தினமும் அதிகாலை
மலர்கள் மணம் வீசும் போது
மாந்தர் விழித்து எழ
உதவுகின்றேன்

1) 
2) 
3) 


02. தாவித் தாவித் திரிந்து
எனக்குப் பிடித்த கனிகளை
பறித்து கொறித்து
உண்டு மகிழ்வேன்

1) 
2) 
3) 

✻ பின்வரும் எண்கோலங்களை அவதானித்து இடைவெளிக்கு வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.




03. 

1) 50 2) 70 3) 60


04. 


1) 15 2) 9 3) 10


✻ கூடியளவு தொடர்பு காணப்படும் கட்டத்தைத் தெரிவு செய்க.

05. 1) 
2) 
3) 

www.lkedu.lk

06. 1) 

2) 

3) 

07. பசியால் வாடிய நரி ஒன்று உணவு தேடிச் செல்லும் போது திராட்சைக் குலையொன்றைக் கண்டு அதனைப் பறித்துத் தின்றது. இவ் வாக்கியம் பிழையானது. இதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.

1) நரி திராட்சையை விரும்பி உண்பதால்.

2) நரிக்கு உணவு தேவையில்லை.

3) நரி ஒரு ஊனுண்ணி விலங்காகும்.

08. ஒருவருடைய மகிழ்ச்சிக்கு உவமானமாக கூறக்கூடியது.

1) மல்லிகை பூத்தது போல


2) உயிரும், உடலும் போல

3) ஆலையில் அகப்பட்ட கரும்புபோல

✠ குறியீடுகளும், அவற்றின் கருத்துகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

 - அப்பா  - சென்றார்  - சந்தைக்கு  - வருவார்

 - இறைச்சி  - வாங்கச்  - மரக்கறி


09.  இக் குறியீடுகள் வழியாக விவரிக்கப்படுவதை சரியாகக் கொண்ட விடை?


1) அப்பா சந்தைக்கு மரக்கறி வாங்கச் சென்றார்.


2) இறைச்சி வாங்க சந்தைக்குச் சென்றார்.


3) அப்பா சந்தைக்கு இறைச்சி வாங்கச் சென்றார்.

✠ 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு அடுத்துவரும் பொருத்தமான உருவின் கீழ் கோடிடுக.


10. 




1) 

2) 

3) 

www.lkedu.lk

11.  எனின்

1) 
2) 
3) 


* குறியீட்டுத் தொகுதியை அவதானித்து விடை தருக.

அமலி  | விமலி  | கமல் 

12. கமல் என்னும் பெயருக்குரிய குறியீட்டுத் தொகுதி எது?

1) 
2) 
3) 


13. மலினி என்னும் பெயருக்குரிய குறியீட்டுத் தொகுதி எது?




1) 
2) 
3) 

14. ஒரு விருந்துபசார நிகழ்வில் 10 பேர் கலந்து கொண்டனர். அவர்கள் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டனர். எனின் அங்கு எத்தனை கைகுலுக்கல்கள் இடம் பெற்றிருக்கும்.

1) 45 2) 90 3) 81

15. ஒரு சதுர வடிவ கடதாசியை நான்காக மடித்து படத்தில் உள்ளவாறு வெட்டி நீக்கியபின் அத்தாளை விரிக்கும் போது தோன்றும் உரு?



1) 
2) 
3) 

16. ஒரு கூடையிலுள்ள பூக்கள் ஒவ்வொரு நிமிடத்துக்கும் இரட்டிப்பாகும். 1 மணித்தியாலத்தில் அக்கூடை நிரம்பிவிட்டது. அந்தக் கூடையில் அரைவாசி எப்போது நிரம்பியிருக்கும்.

1) 30 நிமிடத்தில் 2) 59 நிமிடத்தில் 3) 2 நிமிடத்தில்

17. பொதி ஒன்றுக்கு தபால் கந்தோரில் முதல் 150g இற்கு ரூபா 60/= அறவிடப்படுகிறது. மேலதிகமாக ஒவ்வொரு 50g இற்கும் ரூபா 20/= அறவிடப்படுகிறது. ஒரு செய்திப் பத்திரிகை பொதி ஒன்றின் நிறை 350g ஆகும். எனின் அதற்காக எவ்வளவு பணம் அறவிடப்படும்?


1) ரூ. 160 2) ரூ. 200 3) ரூ. 140


www.lkedu.lk


18. ஒருவர் தனது பயணத்தில் $\frac{1}{4}$ பங்கை புகை வண்டியிலும். $\frac{3}{4}$ பங்கை முச்சக்கர வண்டியிலும் பங்கை லொறியிலும் $\frac{1}{2}$ பயணம் செய்தார். அதன்படி அவர் அதிக தூரம் பயணஞ் செய்தது எந்த வாகனத்திலாகும்?


1) புகைவண்டி 2) முச்சக்கரவண்டி 3) லொறி

19. இவ்வுருவில் நிழற்றிய பின்னத்திற்கு சமமாக நிழற்றப்பட்டுள்ள வடிவத்தைத் தெரிவு செய்க.



1) 

2) 


3) 


✠ ஒரு நகரத்தில் வைத்தியசாலை அமைந்திருப்பது பாடசாலைக்கு வடக்கே 200m தூரத்திலும், தபாற்கந்தோர் அமைந்திருப்பது வைத்தியசாலைக்கு தெற்கே 500m தூரத்திலும், பொலிஸ் நிலையம் அமைந்திருப்பது தபாற்ந்தோருக்கு கிழக்கே 300m தூரத்திலும் ஆகும். இதன்படி


20. ஒரு மனிதன் பொலிஸ் நிலையத்திலிருந்து தபாற்கந்தோருக்குச் சென்று அங்கிருந்து பாடசாலைக்குச் சென்று அங்கிருந்து வைத்தியசாலைக்குச் சென்றார். அதன்படி அவர் பயணம் செய்த முழுத்தூரம் எவ்வளவு?


1) 900m 2) 800m 3) 600m

21. முதலில் உள்ள சதுர வடிவ தாளில் கோடுகளின் வழியே வெட்டி எடுத்து அமைந்த உரு எது?



1) 

2) 

3) 

✠ விலைப்பட்டியலை அவதானித்து விடை காணுங்கள்.

A சீனி 1kg	B உருளைக்கிழங்கு 1kg	C பால்மா 1	D தேயிலை 500kg
ரூ. 110.00	ரூ. 125.00	ரூ. 380.00	ரூ. 220.00

22. விலை குறைந்த பொருள் யாது?

1) சீனி 2) பருப்பு 3) கோதுமை

23. விலைக்கு ஏற்ப பொருட்களை ஏதோ ஒரு ஒழுங்குமுறையில் ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை?

1) ABCD 2) BCAD 3) CDBA

www.lkedu.lk


24. 3kg உருளைக்கிழங்கு வாங்குவதற்கு தேவையான பணம் எவ்வளவு?

1) ரூ.475.00 2) ரூ.375.00 3) ரூ.385.00

25. பால்மா ஒரு பெட்டி வாங்கி ரூ.500.00 தாள் காசு ஒன்றைக் கொடுத்தால் கிடைக்கும் மீதி.

1) ரூ.120.00 2) ரூ. 220.00 3) ரூ.180.00

✠ பின்வரும் உறவுமுறையை விளக்கும் கோட்டுப்படத்தை அவதானித்து விடை காண்க. AB ஆகியோரின் பிள்ளைகள் C உம், E உம் ஆகும்.



26. F என்பவரின் தந்தை யார்?

1) C 2) A 3) D


27. A, B ஆகியோரின் பேரப்பிள்ளை யார்?

1) C 2) F 3) E


28. கயிற்றுத் துண்டொன்றின் நீளம் 80cm ஆகும். அதன் அரைவாசித்துண்டின் $\frac{1}{4}$ பங்கின் அளவு யாது?

1) 15cm 2) 10cm 3) 5cm

29. இங்கு பெறக்கூடிய சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1) 12 2) 17 3) 16

30. 

அருகில் உள்ள உருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதும்போது வரும் விடை எது?

1) $\frac{9}{16}$ 2) $\frac{2}{6}$ 3) $\frac{4}{8}$

31. தேசத்தின் மகுடம் கண்காட்சிக்காக கண்டி மாநகரில் இரு மின்கம்பங்களுக்கிடையே 5 தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன எனின், 18 மின்கம்பங்களிடையே எத்தனை கொடிகள் பறக்கவிடப்பட்டிருக்கும்?

1) 90 2) 95 3) 85

32. 80 இன் அரைவாசியின் $\frac{1}{2}$ பங்குடன் 5 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?

1) 40 2) 25 3) 45

33. மாணவர்கள் புத்தகங்களைத் தாங்கிச் செல்வது.

1) பாடசாலையில் படிப்பவர்கள் என்பதற்காக
2) மனனம் வரும் என்பதற்காக
3) வகுப்பறையில் உபயோகிப்பதற்காக

www.lkedu.lk

34. சந்தையில் மக்கள் கூடுவது.

1) புதினங்கள் பார்ப்பதற்கு

2) பொருட்களை விற்பதற்கு.

3) பொருட்களை விற்கவும் வாங்குவதற்கும்.

35. 5 மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு 5 மணித்தியாலயங்களில் 50km தூரம் சென்றனர். எனின், ஒரு மனிதன் 1 மணித்தியாலத்தில் நடந்த தூரம் எவ்வளவு?

1) 5km 2) 20km 3) 10km

✠ பின்வரும் வினாக்களில் தடித்த எழுத்தில் காணப்படும் சொற்களின் பொருளைத் தரும். விடையைத் தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

36. பெண்கள் வயல் வெளிகளில் உள்ள களைகளை பிடுங்கினர்.

1) களனி, பயிர் 2) நிலம், நெல் 3) கழனி, புல்

37. சூரியன் தகதகவென வான் வெளியில் பவனி வரத்தொடங்கினான்.

1) திங்கள், மறைதல் 2) ஆதவன், உதித்தல் 3) கதிரவன், உலா

38. சங்கரி மாலினியை விட உயரம் குறைந்தவள். மாலினியும் விமலினியும் உயரத்தில் சமனானவர்கள். ஆனால் துவரகா மாலினியை விட உயரம் கூடியவள் எனின் இவரகளுள் உயரம் கூடியவர் யார்?

1) சங்கரி 2) விமலினி 3) துவரகா

✠ கீழுள்ள தரவை அவதானித்து வினாவிற்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

39.

6	9	4	7	
△	□	○	□	?
○	□	○	△	11

? எனும் குறியினால் காட்டப்படும் இடத்தில் வரவேண்டிய எண் யாது?

1) 15

2) 12

3) 10

40. ஆரம்பம் முதல் இறுதி செயல் வரை சரியாக ஒழுங்குபடுத்தப்பட்ட விடையை காண்க.

1) பிட்டு ⟶ மா ⟶ நெல் ⟶ அரிசி

2) மரம் ⟶ பூ ⟶ இலை ⟶ காய்

3) மரம் ⟶ பலகை ⟶ தச்சன் ⟶ கதிரை

www.lkedu.lk

தரம் – 05 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்காக
தயார்ப்படுத்தும் மாதிரி வினாத்தாள் – 1

பெயர் : .....

நேரம் : 1மணி 15நிமிடங்கள்

வினாத்தாள் II

✠ எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

நாங்கள் கல்விச் சுற்றுலா சென்ற வேளை சீகிரியா மலைக்குப் போயிருந்தோம். அங்கே தூரத்தில் நின்று பார்த்தபோது ஒரு பெரிய சிங்கம் படுத்திருப்பது போலக் காட்சியளித்தது. அருகில் சென்ற போது தான் உண்மையான அமைப்பைக் கண்டோம். இருவர் இருவராக மலையில் ஏறினோம். கோட்டை தெரிந்தது. அக்கோட்டையைச் சுற்றி அழிபாடு அடைந்த நிலையில் அகழிகளும் தென்பட்டன. பல்வேறு அளவிலான படிக்கட்டுக்கள். மேடைகள். இருக்கைகளாகப் பயன்படுத்தப்பட்ட பாறைக்கற்கள் என்பவற்றைப் பார்த்துக் கொண்டே ஏறினோம்.

✠ இப்பந்தியிலிருந்தே (I) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை தருக.

1) இப்பந்தி எதைப்பற்றி விபரிக்கின்றது? .....

2) "சிதைவு" எனபதற்கான கருத்தை எழுதுக? .....

3) கோட்டையைச் சுற்றியுள்ள ஆழமான நீர் நிலையை குறிக்கும் ஒரு சொல் எது?

.....

4) இப்பந்தியிலுள்ள தன்மை, பன்மை, பெயர், சொல்? .....

5) "வரை" என்ற சொல் குறிக்கும் ஒத்த சொல்லை எழுதுக? .....

6) இப்பந்தியிலுள்ள தன்மைப் பன்மை வினைச் சொல்? .....

7) "சமீபம்" எனும் சொல்லின் எதிர்ச் சொல் எது? .....

8) "போயிருந்தோம்" எனும் சொல்லை பிரித்தெழுதுக .....+ .....

9) சிங்கத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைமொழி எது? .....

10) இப் பந்தியிலுள்ள உவமைத் தொடர் எது? .....

11) அடைப்பிலுள்ள சரியான சொல்லின் கீழ் கீறிட்ட வசனங்களை கருத்துடையதாக்குக.

1. வேடன் எய்த ..... பட்டு மான் இறந்து. (பானம் / பாணம் / பாநம்)
2. "ஔவையார்" என்பதிலுள்ள உயிர்க்குறிகளின் எண்ணிக்கை (1 / 2 / 3) ஆகும்.

www.lkedu.lk



Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள், செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில் இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

3. திருக்குறளில் ..... அதிகாரங்கள் உண்டு. (1330 / 130 / 133)

4. யானை : பிடி எனின் மான் : ..... (களிறு / பிணை / கலை)

5. ஓதுதல் என்பது (வினைச்சொல் / தொழிற்பெயர் / குணப்பெயர்)

6. அக்கம் பக்கம் என்பது (இரட்டைக்கிளவி / அடுக்குத்தொடர் / இணைமொழி)

7. தமிழ் மொழியில் ..... மெய்யெழுத்துக்கள் உள்ளன. (12 / 18 / 216)

12) "நாங்கள், எங்கள், நீங்கள், உங்கள்" போன்ற சொற்களை மாத்திரம் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களின் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

1. ..... தயாராக ..... புறப்படும் நேரத்தைக் கூறுங்கள்.

2. ..... கொண்டுவரும் ..... ஆடைகளை இரவே ..... அடுக்கி வைத்துவிடுங்கள்.

3. ..... இப்போதே ..... பொருட்களை அடுக்கிவிட்டோம்.

13) பின்வரும் இணைமொழிகளை பூரணப்படுத்துக.

1. சீரும் - ..... 2. கங்கு - .....

14) பின்வரும் பழமொழிகளில் விடுபட்ட சொல்லை எழுதி பூரணப்படுத்துக.

1. "செல்வம் என்பது ..... நிறைவே"

2. "போதுமென்ற மனமே ..... செய்யும் மருந்து"

15) பின்வரும் தொடர்களுக்கான தனிச் சொல்லை எழுதுக.

1. தானும் அனுபவியாது பிறருக்கும் கொடுக்காது வாழ்பவன். .....

2. 25ஆவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா? .....

16) பின்வரும் ஆங்கில வசனங்களுக்கான தமிழ் கருத்தை எழுதுக.

1. Where are you going? .....

2. Please open your book .....

17) "உங்கள் சுகம் எப்படி?" என்பதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதுக.

.....

18) "அன்ன (G) குறுதுமா எனவா" எனும் சிங்கள உச்சரிப்பின் தமிழ் கருத்து யாது?

.....

www.lkedu.lk

19) "சிற்றுண்டிச்சாலை எங்கே உள்ளது?" எனும் வாக்கியத்தை எவ்வாறு சிங்களத்தில் வினவுவது? சிங்கள உச்சரிப்பை வெற்றிடத்தில் எழுதி விடையை பூரணப்படுத்துக.

..... தியன்னே?

20) "எம்மிடமுள்ள செல்வங்களில் சிறந்த செல்வம் கல்விச் செல்வம்" எனும் தலைப்பில் 5 சொற்களுக்குக் குறையாது 3 வாக்கியம் எழுதுங்கள்.

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

✠ தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடை எழுதுக.

21. வெற்றிடத்தைப் பூர்த்தி செய்க.

	எண்	சொற்களில்
1)	.....	பதினேழாயிரத்து எண்ணூற்றொன்று
2)	60 900	.....

22. தரப்படும் எண்களுக்கு முன்னாலும் பின்னாலும் அமைய வேண்டிய எண்களை அதன் அமைப்பிற்கேற்ப வெற்றிடத்தில் எழுதுங்கள்.

	முன்	எண்	பின்
1)	.....	5099	.....
2)	.....	XIX	.....

23. (1) (4) (5) இவற்றிலிருந்து உருவாக்கக் கூடிய 3 இலக்க தொகுதிகளுடைய எண்களை உருவாக்கி அவற்றை இறங்கு வரிசைப்படுத்துகையில் மூன்றாவதாக அடையும் விடையை எழுதுக.

..... ஆகும்.


24. 1 லீற்றர் பெற்றோலின் விலை ரூ.116.00 எனின் 1 லீற்றர் 750 மில்லி லீற்றர் பெற்றோல் வாங்க எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்?

..... ஆகும்.

www.lkedu.lk

25. உரோம எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

IV, XI, XIV, VI, IX, ...

26. 


இவ்வுருவின் படி

1) செங்கோணத்தைவிட கூடிய கோணம் எத்தனை?

.....

2) செங்கோணத்தை விட குறைந்த கோணம் எத்தனை?

.....

27. 

அருகில் தரப்படும் உருவில் நிறம் தீட்டப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னமென்பதை அருகிலுள்ள புள்ளிக்கோட்டில் விடை எழுதுக.

.....

28. பின்வரும் பின்னங்களை கூட்டி விடையை எழுதுக. $\frac{1}{2}+\frac{1}{5}=$ .....


29. அருகிலுள்ள தகவலுக்கமைய

1. காலியில் இருந்து புத்தளம் வரையுள்ள தூரம் யாது?
(.....km)
2. மாத்தறையிலிருந்து கொழும்பு வரையான தூரம் எவ்வளவு? (.....km)

			புத்தளம்
		கொழும்பு	142km
	காலி	116km	.....
மாத்தறை	45km	161km	303km

30. கடையொன்றில் 5 நாட்கள் விற்பனை செய்யப்பட்ட வாழைப்பழங்களின் அளவு kgஇல் தரப்பட்டுகின்றது. இவற்றைக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(1kg யில் உள்ள பழங்களின் எண்ணிக்கை 4 ஆகும்)



1) வியாழக் கிழமை விற்பனை செய்யப்பட்ட பழங்கள் எத்தனை?

.....பழங்கள்

2) புதன்கிழமை விற்பனை செய்யப்பட்ட பழங்களின் $\frac{1}{3}$ பங்கு எத்தனை?

.....பழங்கள்

3) ஒரு பழம் ரூ.7.50 சதம் எனின் வெள்ளிக்கிழமை பழ விற்பனையால் கிடைத்த வருமானம் யாது?


.....

www.ikeau.lk

* சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.

31. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் தியான முறையின் 3வது செயற்பாடு எது?
1) மனதைத்தளர்த்தல் 2) மனவுறுதி 3) பிரார்த்தனை

32. இலங்கையின் தற்போதய தேசிய விளையாட்டு எது?
1) எல்லே 2) காற்பந்து 3) கரப்பந்து

33. 

சூரிய ஒளி நன்றாகப் படும் இடம் ஒன்றில் இருந்த இரு தாவரத்தில் ஒரு தாவரத்தை பரிசோதனைக்காக விமல் என்ற மாணவன் படத்தில் உள்ளவாறு பொலித்தீன் உறை ஒன்றினால் கட்டினான். இவற்றை செய்தமைக்கான காரணம் யாது?
1) தாவரம் ஆவியீர்ப்பு நடத்துகின்றது என்பதை அறிய
2) தாவர வளர்ச்சிக்கு சூரிய ஒளி அவசியம் என்பதை அறிய
3) தாவர வளர்ச்சிக்கு நீர் அவசியம் என்பதை அறிய




34. பின்வரும் தாவர இலைகளுள் செவ்வரத்தைக்குறிய இலை எது?
1) 
2) 
3) 

35. பின்வருவனவற்றுள் இயற்கை அனர்த்தமாக அமையாதது.
1) வாகனத்தில் அடிபடுதல் 2) சுனாமி ஏற்படுதல் 3) மண்சரிவு

36. 

இலங்கையை இவ்வாறு கோடுகளினால் பிரித்துக் காடடப்பட்டடிருப்பது.
1) மாகாணங்கள்
2) மாவட்டங்கள்
3) பிரதேசங்கள்

37. புளிப்புச் சுவையுள்ள பழங்களில் அதிகளவில் காணப்படும் விற்றமின்.
1) விற்றமின் C 2) விற்றமின் A 3) விற்றமின் B

38. கீழ்வருவனவற்றுள் ஒளிரும் மின்சுற்றைக் காட்டும் விடை எது?
1) 
2) 
3) 

39. 

இக்குறியீட்டால் கருதப்படுவது.
1) முன்னால் பாதசாரிகள் கடவை உள்ளது என்பதாகும்.
2) பாதசாரிகள் கடவை என்பதாகும்
3) பாதுகாப்பற்ற பாதசாரிகள் கடவை முன்னால் என்பதாகும்.

www.lkedu.lk


40. புன்னை, இறப்பர், தேங்காய், தாமரை போன்ற வித்துக்கள் பரம்பலடைவது.
1) நீரால் 2) காற்றினால் 3) விலங்குகளினால்

41. சில பொருட்களில் காணப்படும் இக் குறியீடுகளில் பொருட்களை கவனமாக பயன்படுத்தல் என்பதை காட்டும் குறியீடு.
1) 
2) 
3) 

42. நன்நடத்தை சான்றிதழ் ஒன்றை கையொப்பமிட்டு உறுதிப்படுத்த அரசாங்க அதிகாரம் அளிக்கப்பட்டோர்களைக் காட்டும் விடையின் கீழ் கீறிடுக.
1) கிராமசேவகர், பிரதேச செயலாளர்.
2) மத்தியவங்கி ஆளுனர், நிதியமைச்சர்.
3) வைத்திய அதிகாரி, தபால் அதிபர்

43. "CFL" என்பது எதனைக் குறிக்கின்றது?
1) தரச்சான்று 2) சிக்கன மின்குமிழ் 3) புத்தகச் சான்று

44. கீழ்வரும் உபகரணங்களை பயன்படுத்தும் தொழிலாளர்களுக்கமைவாக மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம். அவற்றின் சரியான தொடர்பைக் காட்டும் விடையின் கீழ் கீறிடுக.



1) A D / B C / E F
2) A C / B F / D E
3) A F / B C / D E

45. அலுமினியப் பாத்திரத்தில் கறி சமைக்கும் போது சேர்க்கக் கூடாதது?
1) இஞ்சி 2) கொறுக்காய் 3) மஞ்சள்

46. வேர்ப் பகுதியை தேநீரில் இட்டு சுவையை ஏற்படுத்த பயன்படுத்தும் தாவரம் எது?
1) ஏலம் 2) நன்னாரி 3) தேசி

47. கொண்டிஸ் தூளை நீரில் கரைக்கும் போது நீர் எந்நிறமாக மாற்றமடையும்.
1) ஊதா 2) பச்சை 3) மஞ்சள்

48. இலங்கையின் மிக நீளமான ஆறு எது?
1) மாணிக்ககங்கை 2) மகாவலிகங்கை 3) களுகங்கை

49. இலங்கையில் மிக உயரமான தாமரை மொட்டு கோபுரம் அமைந்துள்ள இடம் எது?
1) யாழ்ப்பாணம் 2) கண்டி 3) கொழும்பு

50. சாதாரண கடிதம் ஒன்றில் ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி யாது?
1) 8.00 2) 15.00 3) 10.00



www.lkedu.lk

51. தனிப்பட்ட முறையில் பயன்படுத்தும் பொருட்களுள் ஒன்று.
1) அலுமாரி 2) தலையணை 3) கண்ணாடி

52. எமது உடலுக்கு சக்தியைத் தரும் உணவு.
1) இறைச்சி 2) பலாக்காய் 3) வல்லாரை

53. நாம் அன்றாடம் பாடசாலையில் பயன்படுத்தும் புத்தகத்தை பேணும் முறைகளில் அல்லாதது.
1) உறை போடுதல்
2) மூலை மடியாது வைத்தல்
3) அழுக்குக் கைகளால் பிடித்தல்

54. மண்ணினுள் நீண்ட காலம் பேணி பாதுகாக்கும் உணவு வகை.
1) இறைச்சி 2) ஈரப்பலா 3) எலுமிச்சை

55. சூரிய நமஸ்காரப் படிமுறையின் 2வது பயிற்சி முறை எது?
1) 
2) 
3) 

56. ஆண்டு முழுவதும் காய்க்கும் மரம்.
1) மரமுந்திரிகை 2) கொய்யா 3) மங்குஸ்தான்

57. பின்வரும் பூக்களிடையே நறுமணம் வீசும் பூ வகை அல்லாதது.
1) செவ்வரத்தை 2) இலுப்பை 3) வேப்பம்பூ

58. பண்டையகால தொடர்பு முறைகளில் ஒன்று.
1) ஒலி எழுப்புதல் 2) இணையம் மூலம் 3) தொலைபேசி மூலம்

59. குடிவரவு குடியகழ்வு திணைக்களத்திடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் சேவைகளில் ஒன்று.
1) தேசிய அடையாள அட்டை
2) கடவுச் சீட்டைப் பெறல்
3) சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறல்

60. எமது பாடசாலைக்கு டெங்கு நோய் தொடர்பாக சூழலைப் பார்வையிடுவதற்கு வருகை தரும் அதிகாரி.
1) பொதுச்சுகாதாரப் பரிசோதகர்
2) கல்விப் பணிப்பாளர்
3) கிராமசேவகர்

www.lkedu.lk

விடைகள்

✱ மாதிரி வினாத்தாள் - 01

வினாத்தாள் I

01) 2	06) 2	11) 1	16) 2	21) 2	26) 3	31) 3	36) 3
02) 1	07) 3	12) 1	17) 3	22) 1	27) 2	32) 2	37) 3
03) 2	08) 1	13) 2	18) 2	23) 3	28) 2	33) 3	38) 3
04) 3	09) 3	14) 1	19) 2	24) 2	29) 2	34) 3	39) 1
05) 3	10) 1	15) 3	20) 2	25) 1	30) 3	35) 3	40) 3

(40 x 2 1/2 = 100)

வினாத்தாள் II

01) சீகிரியா மலை பற்றி 02) அழிவு 03) அகழி 04) நாங்கள் 05) மலை

06) ஏறினோம் / கண்டோம் / போயிருந்தோம் 07) தூரம் 08) போய் + இருந்தோம்

09) பெரிய 10) ஒரு பெரிய சிங்கம் படுத்திருப்பது போல

11) 1. பாணம் 2. 2 3. 133 4. கலை
5. தொழிற்பெயர் 6. இணைமொழி 7. 18

12) 1. நாங்கள், நீங்கள் 2. நீங்கள், உங்கள், நீங்கள் 3. நாங்கள், எங்கள்

13) 1. சிறப்பும் 2. கரை 14) 1. சிந்தையின் 2. பொன்

15) 1. சுயநலவாதி 2. வெள்ளி விழா

16) 1. நீங்கள் எங்கே போகின்றீர்கள் 2. தயவு செய்து உங்கள் புத்தகத்தை திறவுங்கள்.

17) How are you 18) அதோ ஆசிரியர் வருகிறார். 19) ஆ(ப்)பன சாலாவ கொஹேத

(30 x 1 = 30)

20) பொருத்தமான வாக்கியங்களை கவனிக்கவும். (3 x 2 = 6)

உ - ம் :- 1. இது எந்த பொருளுக்கும் ஒப்பிட்டு பார்க்க முடியாது.
2. உலகில் எந்த இடத்திற்கு சென்றாலும் சிறப்பைத்தரும்.

21) 1. 17801 2. அறுபத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரம்

22) 1. 5098, 5100 2. xviii , xx

23) 451 24) ரூ203.10 25) iv, vi, ix, xi, xiv

26) 1. 3 2. 7 27) $\frac{5}{12}$ 28) $\frac{7}{10}$

29) 1. 258km 2. 161km 30) 1. 28 2. 4 3.&.120.00 (30 x 1 = 32)

31) 2	32) 3	33) 1	34) 2	35) 1	36) 1	37) 1
38) 3	39) 2	40) 1	41) 2	42) 1	43) 2	44) 3
45) 2	46) 2	47) 1	48) 2	49) 3	50) 3	51) 3
52) 2	53) 3	54) 3	55) 2	56) 2	57) 1	58) 1
59) 2	60) 1					

(கையெழுத்து தெளிவுக்கு 2 புள்ளி மேலதிகமாக வழங்கவும்)

(30 x 1 = 30)

www.ikedu.lk